தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தமங்கலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவது குறித்த கோரிக்கை, 'மக்களுக்கு, பள்ளிக்கு, கல்விக்கு' முதலிடம் கொடுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 316, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

316—

மாணவர் விடுதி

***47574—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஒன்றியம், சீளியூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2015 செப்டம்பர் 22]

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) காரமடை ஒன்றியம், சீளியூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் இல்லாமை, கல்லாமை என்ற இரண்டும் இல்லாத நிலையை ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்கூறும் அறவழியில் ஆட்சி புரிந்து, தமிழர் குலம் காக்க வந்த தாயே! தரணியில் தமிழர்களைத் தலைநிமிரச் செய்திட்ட எங்கள் அன்னையே! பாரதி காணத் துடித்த புதுமைப் பெண்ணே! 'எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தார்; இங்குள்ள எங்கள் அன்னையைக் கண்டு!' என தமிழினத்தின் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்திட்ட புறநானூறு, எங்கள் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன்.

எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட சீளியூர் மேல்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ 400 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர், தொலைதூரத்திலிருக்கும் பல்வேறு கிராமங்களிலிருந்து, இங்கு வந்து படித்து வருகிறார்கள். அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள், நீண்ட தூரத்திலிருந்து வருகின்ற காரணத்தினாலே, அவர்கள் தங்கிப் படிப்பதற்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றைக் கட்டித் தந்தால், அந்தப் பள்ளியில் மாணவர்களுடைய சேர்க்கையும் அதிகரிக்கும். அதோடுமட்டுமல்லாமல், மலைப் பகுதியிலிருந்து மாணவர்கள் வந்து படிப்பதற்கும் ஏதுவாக

இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, எதிர்காலத்திலாவது அந்தப் பள்ளியிலே ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைமூலம், ஒரு பகுதியில் புதியதாக மாணவர் விடுதி தொடங்க வேண்டுமென்றால், அப்பகுதியில் 8 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இத்துறையின்மூலம் கட்டப்பட்ட வேறு விடுதிகள் இருக்கக்கூடாது என்ற வரன்முறை உள்ளது. சீளியூரில் இருந்து, 5 கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளியங்காடு என்ற இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்விடுதியில் சுமார் 55 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். மேலும், இப்பகுதியில் உள்ள இரண்டு பள்ளிகளிலும் உள்ள 258 மாணவிகளில், 84 மாணவிகள் சீளியூரில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதியில் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர். மேலும், இப்பள்ளியில் உள்ள 211 மாணவர்களில், 70 மாணவர்கள் சீளியூரில் உள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதியில் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர். இவ்விடுதிகள் இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவியரின் விடுதித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது. எனவே, இத்துறையின்மூலம் சீளியூரில் மேலும் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

2015 செப்டம்பர் 22]

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட நகராட்சிப் பகுதியில், 1,500 மாணவிகளைக் கொண்ட பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அதேபோல, அங்குள்ள மகாஜன மேல்நிலைப் பள்ளியிலே 800 மாணவிகள் பயின்று வருகின்றார்கள். இருபாலரும் படிக்கும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே 250 மாணவிகள் படித்து வருகின்றார்கள். அது, ஏறத்தாழ 2,500 மாணவிகள் படித்து வருகின்ற ஒரு நகராட்சியாகும். அந்தப் பகுதியிலே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஒன்றும் இல்லை. ஆகவே, எதிர்வரும் காலத்திலே அந்த நகராட்சிக்குட்பட்ட பகுதியிலே, ஏதாவது ஒரு பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த நகராட்சிப் பகுதியில், இனிவரும் காலங்களில் புதிய விடுதிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 317, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 318, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.